குறை இருந்த காரணத்தால் அரசாங்கம் மின் இணைப்புக் கொடுப்பதை நிறுத்தி வைத்து இருக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை அப்படித்தான் சொன்னார்கள். இப்போது மின்பற்றாக்குறை இல்லாமல் இருப்பதால், பழைய விண்ணப்ப தாரர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கும் மின் பற்றாக் குறைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் பெரிய பாதிப்பு ஒன்றும் கிடையாது. தமிழ்நாட்டில் 5,22,074 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங் கப்பட்டுள்ளது. இன்னும் வழங்கப்பட வேண்டிய மனுக்களின் எண்ணிக்கை 14,420.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கு வது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களைத் தந்து இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் காமராஜர் நகர் என்கிற கிராமத்திலும், எட்டிக்குப்பம் கிராமத்திலும் தொடர்ந்து மனு செய்தும் கொடுக்காமல் இருப்பதை அரசு அறியுமா? பல்வேறு கிராமங் களில் மக்கள் மனு செய்துள்ளதால் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசுக்குத் தெரியாது. தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்க இயலும்.

மின் உற்பத்திக்குத் தேவையான அத்யாவசியப் பொருட்களுக்கான விலை நிர்ணயம்

2—*(வினா எண். 19971) திரு. இ. கணேசன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் உற்பத்திக்குத் தேவையான அத்யாவசியமானப் பொருட்களின் விலையை உயர்த்தும் போது மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்க வற்புறுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் ஏற்படுகிற இழப்புகளுக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியம் தர வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) ஆம்

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மைய அரசால் உயர்த்தப்பட்ட நிலக்கரி விலையின் விளைவாக மாநில அரசுக்கு செலவு எவ்வளவு அதிகம் ஏற்படுகிறது இப்படி, மின் உற்பத்திக்குத்

1984 பிப்ரவரி 21]

தேவையான அத்தியாவசியமான பொருள்களின் விலையை உயர்த்துகின்ற போது, அந்தந்த மாநில அரசின் மின் தயாரிப்புச் செலவுக்குத் தகுந்தபடி ஈட்டுத்தொகை அளிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவ்வப்போது இது போன்ற விலை உயர்வினால் மின்சார வாரியம் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பதை மத்தியஅரசுக்கு நாம் சொல்லி வருகிறோம் உதாரணமாக நிலக்கரி, எண்ணெய் இவற்றின் விலை உயர்வு மற்றும் நிலக்கரியைக் கொண்டு செல்வதற்கான இரயில் மற்றும் கப்பல் சரக்குக் கட்டண உயர்வு போன்றவற்றை மாநில அரசை கலந்து கொள்ளாமலே மத்திய அரசு அவ்வப்போது செய்கிறது இதனால் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு ஆண்டும் 92 கோடி ரூபாய் கூடுதலாக—அதாவது 1979–80 ஆம் ஆண்டு கணக்கின் அடிப்படையில், செலவு செய்ய வேண்டியநிலைமை இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இதை ஈடு செய்வதற்கு பணம் வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துமா என்று கேட்ட இரண்டாவது உப கேள்விக்கு ஆம் என்று கூறியிருக்கிறார்கள். எவ்வளவு தொகை மத்திய அரசிடம் ஈடு செய்ய கேட்கப்பட்டது எப்போது கேட்கப்பட்டது? அவர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறதா இல்லை என்றால் வற்புறுத்திப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிலக்கரி எண்ணெய் போன்றவற்றின் விலையை உயர்த்தும் போது மின்சாரம் உற்பத்தி செய்ய பயன்படுத்துவதற்கான நிலக்கரி, எண்ணெய் விலைகளை உயர்த்தக் கூடாது, விதிவிலக்கு (எக்சம்ஷன்) அளிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம், சந்திக்கும் போது நேரிலேயும் சொல்லி வருகிறோம். ஆனால் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்த நஷ்டத்தை ஈடு செய்ய மத்திய அரசிடம் நிதி கேட்டகப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் 25 சதவீதம் இன்றைக்கு நிலக்கரி விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இதை ஈடு செய்ய அவர்கள் நிதி கொடுக்காவிட்டால் நம்முடைய மின்சார வாரியம் மின்கட்டணத்தை உயர்த்தும் நிலைமை ஏற்படுமே அப்படி உயர்த்துவதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பிரச்னை அதுதான். செலவுகள் அதிகமாகும் போது மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை மாநில அரசுகளுக்கு ஏற்படுகிறது. ஆனால் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் கூட ஓரளவிற்குத்தான் உயர்த்த முடியும். இந்த நிலையை

அறிந்து கொள்வதற்கு மாநில அரசுகளோடு கலந்து பேச வேண்டும். அதாவது கன்சல்டேஷன், கன்சன்ட் இல்லை என்றாலும் கன்ஸல்ட் என்ற முறையில் நிலக்கரி, எண்ணெய் விலையை உயர்த்துவது, இரயிற் மற்றும் கப்பல் சரக்குக் கட்டணத்தை உயர்ந்துவது போன்ற நேரங்களிலாவது, மாநில சர்க்கார்களுடைய பண நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மாநில அரசுகளை கலந்து கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அண்மையில் நிதிக் குழுவிலே கூட மாநில அரசு சார்பாக இதை வற்புறுத்தியிருக்கிறோம். மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் இப்படி விலையை உயர்த்தினால் மாநில அரசுக்கு வேறு வழியில்லாமல் தன்னுடைய நிதியை மத்திய அரசுக்கு கொடுத்து விட்டு, அதைஈடு செய்ய கட்டணங்களை உயர்த்தவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேரள மாநிலத்திற்கு வழங்கப்பட்ட மின்சாரம்

3— *(வினா எண். 20836) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983—ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேரளா மாநிலத்திற்குத் தமிழநாடு அரசு மின் வினியோகம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) சப்ளை செய்யப்பட்ட மொத்த மின்சாரம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ;

(அ) ஆம்.

(ஆ) 1983-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிலவிய மின் நெருக்கடியின் காரணமாக கேரளம் கேட்டதற்கிணங்க மின்சாரம் வழங்கப்பட்டது.

(இ) 11.543 மில்லியன் யூனிட்டுகள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கேரள மாநிலம் கேட்டபோது நம்முடைய அரசும் அவர்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறது. அதைப் போன்று நாமும் கேரள மாநிலத்திலிருந்து வாங்கியிருக்கிறோம். நாம் அவர்களுக்கு யூனிட்டுக்கு என்ன விலைக்கு தந்திருக்கிறோம். அவர்கள் நமக்கு என்ன விலைக்கு கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பெரும் பாலும் கேரளத்திலிருந்துதான் நாம் பெறுவது வழக்கம். அவர்களுக்கு நாம் தருவது மிகமிக குறைவு. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக கேரளத்தினுடைய நிலைமை நமக்கு